# அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம்

## முதன்மைத் தேர்வு இணைய வழி/பகுதி நேரப் பயிற்சி சேர்க்கைக்கான அறிவிப்பு–2026

அறிவிக்கை எண்:அ/1010/2026 நாள்: 01.07.2026

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் 2026–ஆம் ஆண்டுக்கான ஒன்றிய தேர்வாணைய குடிமைப்பணிகளுக்கான முதன்மைத் தேர்வுப் **இணைய வழி/பகுதி நேரப் பயிற்சிக்கு 150 ஆர்வலர்கள்** அனுமதிக்கப்பட உள்ளனர்.

குறிப்பு:

i. **இப்பயிற்சி மையத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான முதன்மைத் தேர்வுப் பயிற்சி பெற 17.06.2026 மற்றும் 18.06.2026 ஆகிய நாட்களில் ஏற்கனவே விண்ணப்பித்திருந்த ஆர்வலர்கள் மட்டுமே இணைய வழி/பகுதி நேரப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க இயலும்.**

ii. **விருப்பமுள்ள ஆர்வலர்கள் தங்களது உள்ளீட்டு விவரங்களை (Login Credentials)பயன்படுத்தி தங்களது விண்ணப்பத்தில் இசைவு தெரிவிப்பதன் மூலம் இப்பயிற்சி மைய இணைய வழி/பகுதி நேரப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.**

iii. **இணைய வழி/பகுதி நேரப் பயிற்சிக்கு விருப்பம் தெரிவிப்பதுடன் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு நேரில் ஆஜராகும் ஆர்வலர்கள் மட்டுமே இணைய வழி/பகுதி நேரப் பயிற்சி பெற அனுமதிக்கப்படுவர். சான்றிதழ் சரிபார்ப்பு/ சேர்க்கையில் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரர்கள் இணைய வழி/பகுதி நேரப் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

### 1.முக்கியமான நாள் மற்றும் நேரம்:

| | | |
|---|---|---|
| 1 | இணைய வழி விண்ணப்பப் பதிவு துவங்கும் நாள் | 02.07.2026<br>(வியாழக் கிழமை)<br>(காலை 6 மணி முதல்) |
| 2 | இணைய வழி விண்ணப்பப் பதிவு முடிவடையும் நாள் | 03.07.2026<br>(வெள்ளி கிழமை)<br>(மாலை 6 மணி வரை) |
| 3 | சான்றிதழ் சரிபார்ப்பு/சேர்க்கை/காப்புத் தொகை செலுத்துதல்<br>நடைபெறும் இடம்:<br>அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம், "காஞ்சி" பசுமைவழிச்சாலை, சென்னை–28. | 04.07.2026<br>(சனிக் கிழமை)<br>(காலை 9.30 மணி) |
| 4 | இணைய வழி/பகுதி நேரப் பயிற்சி வகுப்புகள் துவக்க நாள் | 06.07.2026<br>(திங்கட் கிழமை) |

**2.விண்ணப்பிக்கும் நடைமுறை:**

விண்ணப்பங்கள் இணைய வழி மூலம் மட்டும் வரவேற்கப்படுகின்றன. இணையவழி விண்ணப்பங்களை (www.civilservicecoaching.com) என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சி மையத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான முதன்மைத் தேர்வுப் பயிற்சி பெற 17.06.2026 மற்றும் 18.06.2026 ஆகிய நாட்களில் ஏற்கனவே விண்ணப்பித்திருந்த ஆர்வலர்கள் மட்டுமே இணைய வழி/பகுதி நேரப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க இயலும்.

விருப்பமுள்ள ஆர்வலர்கள் தங்களது உள்ளீட்டு விவரங்களை (Login Credentials) பயன்படுத்தி தங்களது விண்ணப்பத்தில் இசைவு தெரிவிப்பதன் மூலம் இப்பயிற்சி மைய இணைய வழி/பகுதி நேரப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

**3.தேவையான சான்றிதழ்கள்:**

விண்ணப்பித்த ஆர்வலர்கள் சான்றிதழ் சரிப்பார்ப்பிற்கு 04.07.2026 அன்று ஆஜராக வேண்டும். சான்றிதழ் சரிப்பார்ப்பின் போது கீழ்க்காணும் மூலச் சான்றிதழ்களையும் (Original Certificates) அவற்றின் 1 நகலையும் (Xerox) கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

1. விண்ணப்பம் (Application)
2. முதல்நிலைத் தேர்விற்கான நுழைவுச் சீட்டு (Hall Ticket)
3. பிறப்பிட சான்றிதழ் (Nativity Certificate)
4. வருமான சான்றிதழ் (Income Certificate)
5. சாதி சான்றிதழ் (Community Certificate)
6. அனைத்து கல்வி சான்றிதழ்கள் (SSLC, HSC, UG, PG Certificates)
7. மாற்று சான்றிதழ் (Transfer Certificate)
8. வங்கி கணக்கு புத்தகம் முதற்பக்கம் (Bank Passbook First Page)
9. ஆதார் (Aadhar Card)
10. Passport Size Photo– 3 & Stamp Size Photo– 2
11. மாற்றுத்திறனாளி சான்றிதழ் (DAP Certificate) (மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் மட்டும்)
12. தடையின்மை சான்றிதழ் (No Objection Cerrificate) (அரசுப்பணியில் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும்)

மூலச் சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரும்போது, தேவையான மூலச் சான்றிதழ்களில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ்களையோ சமர்ப்பிக்கத் தவறினால் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது.

**4.காப்புத்தொகை:**

(அ) சான்றிதழ் சரிப்பார்ப்பின் போது ரூ.3,000/- காப்புத்தொகை செலுத்த வேண்டும்.
(ஆ) காப்புத்தொகை செலுத்தும் ஆர்வலர்கள் மட்டுமே இணைய வழி/பகுதி நேரப் பயிற்சி பெற இயலும்.
(இ) காப்புத்தொகை ரூ.3,000/- பயிற்சியின் நிறைவில் திரும்ப வழங்கப்படும்.

**4.ஊக்கத்தொகை:**

இப்பயிற்சி மையத்தில் இணைய வழி/பகுதி நேர முதன்மைத் தேர்வுப் பயிற்சி பெறும் ஆர்வலர்களுக்கு தேர்வு தயாரிப்பு காலமான மூன்று மாத காலத்திற்கும் சேர்த்து ஊக்கத் தொகையாக ரூ.9,000/- வழங்கப்படும்.

**5.நிபந்தனைகள்:**

(அ) தமிழ்நாட்டைச் சார்ந்த ஆர்வலர்கள் மட்டுமே பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

(ஆ) முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற ஆர்வலர்கள் மட்டுமே முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

(இ) அரசு பணியில் உள்ளவர்கள் கட்டாயமாக தடையின்மை சான்றிதழ் (No Objection Cerrificate) சமர்ப்பிக்க வேண்டும்.

**(ஈ) சான்றிதழ் சரிப்பார்ப்பிற்கு கட்டாயம் ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது. மின்னஞ்சல், தொலைபேசி மற்றும் இதர வழிகளில் சான்றிதழ் சரிப்பார்ப்பு நாள் மற்றும் நேரம் ஆகியவற்றை மாற்றக் கோரி வரும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

**6.பயிற்சி மையத்துடனான தகவல் தொடர்பு:**

மேலும் விவரங்களுக்கு, பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
தொலைபேசி: 044-24621475
புலன எண் (Whatsapp): 9345766957
மின்னஞ்சல்: aicscc.gov@gmail.com
அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

ஒம்/-முதல்வர்
அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம்,
சென்னை-28.